John Keells Group

# JK செய்திகள்

2 ஆவது காலாண்டு 2022/23 | 2022 ஏப்ரல், மே மற்றும் ஜூன் செய்திகள்




## கீல்ஸ் யுஎஸ்எயிட் உடன் பங்குடமை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது

இது தொடர்பில் 06 ஆவது பக்கத்தைப் பார்க்கவும்

# விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்




யூனியன் அஷ்ரன்ஸ் பிஎல்சி, 2022 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதியன்று இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற மூன்று ஆயுள் காப்புறுதி வர்த்தகநாமங்களில் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டது. இந்த அங்கீகாரம் உலகின் முன்னணி வர்த்தகநாம மதிப்பீட்டு ஆலோசனை சேவை நிறுவனமான Brand Finance உடன் இணைந்து LMD வணிக சஞ்சிகையால் வழங்கப்பட்டது.




2022 மார்ச் 18 அன்று நான்கு புகழ்பெற்ற உலகளாவிய விருதுகளை யூனியன் அஷ்ரன்ஸ் வென்றுள்ளது. Global Business Magazine சஞ்சிகையால் வழங்கப்பட்ட இந்த பாராட்டுக்கள், புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கலில் நிறுவனத்தின் தொழில்துறை முன்னணி வகிக்கும் சாதனைகளை அங்கீகரிக்கிறது. 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சிறந்த டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட ஆயுள் காப்புறுதி, 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சிறந்த புதிய காப்புறுதித் தீர்வு, 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மிகவும் புத்தாக்கமான கல்விக் காப்புறுதித் திட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சிறந்த சமூகப் பொறுப்புணர்வு காப்புறுதி நிறுவனம் ஆகியவை யூனியன் அஷ்ரன்ஸ் வென்ற விருதுகளாகும்.




2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி Brand Finance Lanka இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான வர்த்தகநாம வலிமை மதிப்பெண் 89.3 மற்றும் AAA தரமதிப்பீட்டுடன், கீல்ஸ் இலங்கையின் மிகவும் வலுவான வர்த்தகநாமமாகத் தரவரிசைப்படுத்தப்பட்டமை நிறுவனத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனை. மேலும், கீல்ஸ் ஆனது தொடர்ந்து 4 ஆவது ஆண்டாகவும் 6 ஆவது ஸ்தானத்திலுள்ள மிகவும் மதிப்புமிக்க இலங்கை வர்த்தகநாமமாகவும் மற்றும் மிகவும் பெறுமதியான சுப்பர் மார்க்கெட் (பல்பொருள் அங்காடி) வர்த்தகநாமமாகவும் திகழ்கின்றது.

தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பயணத்தில் விற்பனை மையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் உள்ள கீல்ஸின் 5000 இற்கும் மேற்பட்ட அணி உறுப்பினர்களின் ஒவ்வொருவரின் முயற்சிகள் மற்றும் பங்களிப்புகள் இல்லாமல் இந்த அங்கீகாரம் சாத்தியமாகியிராது.

# பணிப்பாளர் சபைத் தலைவரின் செய்தி

2022 மே 23 அன்று வெளியிடப்பட்ட ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி 2021/22 ஆண்டு அறிக்கையிலிருந்து பெறப்பட்டது.



கிறிஷான் பாலேந்திரா
குழுமத்தலைவர்

- கொவிட்-19க்கு முந்தைய நிலைமட்டங்களை எட்டிய எங்களின் பெரும்பாலான வணிகத் துறைகளின் தொடர்ச்சியான பெறுபேற்றுத்திறனுடன் மீளாய்வு செய்யப்படும் ஆண்டில் குழுமம் வலுவான மீட்பு உத்வேகத்தைக் காண்பித்துள்ளது.
- பொழுதுபோக்குத் தொழிற்துறைக் குழுமம், குறிப்பாக, இதற்கு முந்தைய ஆண்டில் தொடர்ச்சியான எதிர்மறையான EBITDA (வட்டி, வரிகள், தேய்மானம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு முன்னரான வருவாய்) ரூபா 3.59 பில்லியனுடன் ஒப்பிடுகையில், தொடர்ச்சியான EBITDA ரூபா 3.78 பில்லியனுடன் பெறுபேற்றுத்திறனில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை பதிவாக்கியுள்ளது.
- ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 80 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா தொகை கொண்ட JKH பங்குகளை தனிப்பட்ட முறையில் இடுவது 2021 டிசம்பரில் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டது. 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா தொகை பரிவர்த்தனையின் முதல் கட்டம் 2022 ஜனவரி 19 அன்று முடிவடைந்தது.
- "Cinnamon Life" இல் 395 மில்லியன் அமெரிக்க டொலர் கடன், 2022 ஜூலை மாதத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட இருந்த நிலையில், 2021 டிசம்பரில் கூட்டுக்கடன் வசதி மூலம் மீள் கடன் வசதி செய்யப்பட்டது. புதிய கடன் வசதியானது, ஆரம்ப கடன் வசதியின் கீழ் 2022 ஜூலை முதிர்வு திகதியுடன் சீரமைக்க, ஆறு மாத காலத்திற்கு 225 மில்லியன் அமெரிக்க டொலர் தவணைக் கடன் மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் இணைப்புக் கடன் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியது.
- கொழும்பு துறைமுகத்தில் WCT-1 செயற்திட்டத்தின் நிர்மாணம், செயல்பாடு மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றுக்கான உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள், செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் செலவுகள் மற்றும் பிற கட்டமைப்பு ஏற்பாடுகளுக்கான பணிகள் உள்ளடங்கலாக, பூர்த்தி செய்யப்பட்டு, 2022 பெப்ரவரியில் கட்டுமானப் பணியைத் தொடங்குவதற்காக செயற்திட்ட நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது.
- குழுமத்தின் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு சிறப்பு மையமான OCTAVE, சில்லறை வியாபாரம் மற்றும் நுகர்வோர் உணவுத் தொழிற்துறைக் குழுக்களில் பல 'பயன்பாட்டு நிகழ்வுகளில்' பணியாற்றியுள்ளதுடன், அவை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு, அமுலாக்கம் செய்யப்பட்டுள்ளன. வணிகத் தலைமைகள் மற்றும் மாற்றத்திற்கான மேம்பட்ட பகுப்பாய்வு நுண்ணறிவுகளை வெளிக்கொணருவதில் இவை பாரிய பெறுமதியை சேர்ப்பிப்பதாக ஆரம்ப சோதனைச் செயற்திட்டங்களின் அறிகுறிகள் புலப்படுத்தியுள்ளன.
- பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் அரவணைப்பு உள்ளடக்க நிகழ்ச்சித்திட்டமானது, "ONE JKH" என்ற வர்த்தகநாமத்தின் கீழ், எங்கள் தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிக்கவும், மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கவும் மற்றும் LGBTIQ+ சமூகத்தை உள்ளடக்கியதாகவும் பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.
- குழுமத்தின் தலா மில்லியன் ரூபா வருவாயில் காபன் அடிச்சுவடு 18 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன், தலா மில்லியன் ரூபா வருவாய்க்கு உபயோகிக்கப்படும் நீர் 19 சதவீதத்தால் குறைந்துள்ளது.

| | தொடர்ச்சியான EBITDA* | | |
|---|---|---|---|
| ரூபா.'000 | 2021/22 | 2020/21 | Variance |
| போக்குவரத்து | 6,140,923 | 3,610,416 | 2,530,507 |
| நுகர்வோர் உணவுகள் | 3,484,778 | 3,317,535 | 167,243 |
| சில்லறை வியாபாரம் | 7,549,338 | 5,522,678 | 2,026,660 |
| பொழுதுபோக்கு | 3,784,901 | (3,588,464) | 7,373,364 |
| ஆதனம் | 7,867,199 | (17,348) | 7,884,546 |
| நிதியியல் சேவைகள் | 5,023,608 | 3,644,923 | 1,378,685 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் பெருந்தோட்ட சேவைகள் அடங்கலாக ஏனையவை | 5,407,909 | 3,081,916 | 2,325,993 |
| குழுமம் | 39,258,655 | 15,571,656 | 23,686,999 |

*EBITDA இல் வட்டி வருமானம் மற்றும் பங்கு கணக்கு முதலீட்டாளர்களின் முடிவுகளின் பங்கு ஆகியவை அடங்கும், இது வரிக்குப் பிந்தைய இலாபத்தின் பங்கை அடிப்படையாகக் கொண்டது, ஆனால் வணிகங்களின் அடிப்படை பண செயல்பாட்டு பெறுபேற்றுத்திறனை வெளிப்படுத்த, வெளிநாட்டு நாணய மாற்று இலாபங்கள் மற்றும் நட்டங்களிலிருந்து அனைத்து தாக்கங்களும் நீங்கலாக கணிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக சமூக நலன்புரிச் செய்திகள்

## ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் ஹபறணையில் உள்ள பொலிஸ் நிலையத்துடன் மூலோபாய கூட்டாண்மைகளை மேம்படுத்தியுள்ளது



இலங்கை காவல்துறையின் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்துடனான தனது கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் வேண்டுகோளின் பேரில் ஹபறணை பொலிஸ் நிலையத்தில் உள்ள கருமபீடத்திற்கு மிகவும் அத்தியாவசியமான e-studio போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் நீர் வழங்கல் கருவியை நன்கொடையாக வழங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி சினமன் லொட்ஜ் ஹபறணை மற்றும் சினமன் ஹபறணை விலேஜ் ஆகியவற்றுடன் இணைந்து WAVE செயற்திட்டத்தின் கீழ் ஒரு முயற்சியாகவும், ஜோன் கீல்ஸ் *மக்கள் சக்தி* - ஹபறணை திட்டத்தின் கீழ் ஒரு அடிப்படை மட்ட ஈடுபாட்டாகவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஹபறணையில் உள்ள இரண்டு சினமன் ஹோட்டல்களின் பிரதிநிதிகள் மற்றும் ஹபறணை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு, இந்த கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஹோட்டல் வளாகத்தின் பிரதிநிதிகளில் ஹபறணை வளாகத்தின் பொது முகாமையாளரான முர்ஃபாத் ஷெரீஃப், சினமன் ஹபறணை விலேஜின் உதவி முகாமையாளரான ஃபௌமி இப்ராஹின், வளாக பாதுகாப்பு முகாமையாளரான இவான் பெரேரா, உதவி பாதுகாப்பு முகாமையாளரான விஜித குமார மற்றும் CNT இயற்கை ஆர்வலரான கயான் பிரதீப் ஆகியோர் அடங்கியிருந்தனர். பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளில் ஹபறணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான அபேசிங்க, ஹபறணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான ஜயலத் மற்றும் பொலிஸ் நிலைய நிர்வாக பொறுப்பதிகாரியான பந்துல ஆகியோர் அடங்கியிருந்தனர்.

## Hikka Batik கைவினைஞர்களுக்கான தொடர்ச்சியான திறன் மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்பு



பயிற்சிகள், புதிய உற்பத்தி மேம்பாடு மற்றும் வடிவமைப்பு பயிற்சிப்பட்டறைகள் என சந்தை வாய்ப்புக்கள் மற்றும் மாதிரி விற்பனைகளுக்கு இணைப்புப் பாலத்தை ஏற்படுத்தும் பல்வேறு முயற்சிகள் ஊடாக, ஜோன் கீல்ஸ் *மக்கள் சக்தி* - ஹிக்கடுவை என்ற செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு அது ஆரம்பித்த காலம் தொட்டு Hikka Batiks வர்த்தகநாமத்தின் கீழ் செயல்பட்டு வருகின்ற 13 பெண்களுக்கு ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் தொடர்ச்சியாக உதவி வருகின்றது.

Hikka Batiks ஐ ஒரு வணிகமாகப் பதிவுசெய்து, Artravale (வோக்கர்ஸ் டுவர்ஸின் சொகுசு வர்த்தகநாமம்) மற்றும் குழுமத்தின் செயற்திட்ட கூட்டாளரான சினமன் ஹிக்கா டிரான்ஸ் ஆகியவற்றுடன் புதிய சந்தை இணைப்புகளை உருவாக்குவதற்கும் உதவியுள்ளது.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், Batik கைவினைஞர்கள் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் 2 பட்டதாரிகளுடன் சில ஆழமான வடிவமைப்பு சிந்தனைப் பயிற்சிப்பட்டறைகளில் இணைந்து கொண்டனர், இது பெண்கள் மத்தியில் தன்னம்பிக்கையின் அளவை கணிசமாக அதிகரிக்க உதவியது.

சினமன் ஹிக்கா டிரான்ஸ் பொது முகாமையாளரான லங்கேஷ பொன்னம்பெரும மற்றும் அவரது அணியின் வழிகாட்டுதலின் கீழ், ஹோட்டல் ஆனது Hikka Batik கைவினைஞர்களுடன் இணைந்து ஊழியர் விடுதிகளில் பயன்படுத்தப்படும் கைவிடப்பட்ட கைத்தறி துணிகளை மீள்சுழற்சி அடிப்படையில் சமையலறை துவாய்களாக உற்பத்தி செய்தல் போன்ற பல நிலைபேண்தகு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த சவாலான காலங்களில் கைவினைஞர்களின் வருமானம் மேம்படும் அதே நேரத்தில் வணிகத்திற்கான செலவுகளையும் சேமிக்க இடமளிக்கிறது.

## ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் சுதுவெலிபொத்த காடுகளை மீட்டெடுப்பதற்காக தன்னார்வலர்களை ஒன்றுதிரட்டியுள்ளது


2022 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை அனுட்டிக்கும் வகையில், ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் ஆனது சிங்கராஜா வனப் பகுதிக்கு அருகாமையில் உள்ள கலவான, சுதுவெலிபொத்த 'சினமன் மழைக்காடு மீள்வளர்ப்பு செயற்திட்டத்திற்கு' கட்டம் கட்டமாக மரக்கன்றுகளை நாட்டுவதற்காக முறையே 2022 மே 21 மற்றும் ஜூன் 11 ஆம் திகதிகளில் குழுமத்தின் தன்னார்வத் தொண்டர்களின் முதல் இரண்டு தொகுதி அணிகளை ஒன்றுதிரட்டியிருந்தது. Cinnamon Nature Trails இன் சிரேஷ்ட உயிரியலாளரான விமுக்தி வீரதுங்க மற்றும் Ruk Rakaganno வின் தலைமை அதிகாரியான துஷி பெரேரா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இது முன்னெடுக்கப்பட்டது.

மொத்தம் 69 தன்னார்வத் தொண்டர்கள் இரண்டு கட்ட முயற்சிகளில் பங்கேற்று, மரக்கன்றுகளை நாற்று மேடைகளிலிருந்து இருந்து மேட்டின் உச்சிக்கு எடுத்துச் செல்வதற்காக மனிதச் சங்கிலியை உருவாக்கினர். மலையேற்றத்தின் தூரம் மற்றும் தன்மையைக் கருத்தில் கொள்ளும் போது இது எளிதான காரியமல்ல. அந்த இடத்தில் சில மரக்கன்றுகளை நாட்டவும் தன்னார்வலர்களுக்கு வாய்ப்பு கிட்டியது.

"இது ஒரு கடினமான பணி, ஆனால் இச்செயற்திட்டத்தின் மூலம் நாங்கள் பெற்றுக்கொண்ட தனித்துவமான அனுபவம் நிச்சயமாக முற்றிலும் மதிப்புள்ளது. பயணத்தின் போது எங்களின் மீது சில சமயங்களில் மழை பொழிந்த போதிலும் போது கூட நாங்கள் தொடர்ந்து மேலேறி, முன்னெடுத்துச் செல்வதற்கு நாங்கள் உழைத்த மகத்தான நோக்கமே காரணம்", என்று John Keells Property இன் தன்னார்வத் தொண்டரான ஜனித் பெரேரா தனது அனுபவத்தை விளக்கினார்.



## ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் ஆங்கில மொழி புலமைப்பரிசில் திட்ட பயனாளிகளிடையே சிறுவர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது



JKF ஆனது LEADS உடன் இணைந்து WAVE (அறிவூட்டல் மூலம் வன்முறைக்கு எதிராக செயல்படுதல்) செயற்திட்டத்தின் கீழ் ஒன்லைன் தளங்களில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தொடர் அமர்வுகளை ஆரம்பித்துள்ளது.

முதல் நான்கு அமர்வுகள் ஏப்ரல் 25 மற்றும் 26, மே 24 மற்றும் ஜூன் 3 ஆம் திகதிகளில் கொழும்பு 02, ரணால, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, ஹிக்கடுவ, சூரியவெவ, நெலுவ, மற்றும் ஹபறணை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து 12 முதல் 14 வயதுக்குட்பட்ட 298 மாணவர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டன.

LEADS Sri Lanka வைச் சேர்ந்த தில்ருக்ஷி இலங்ககோன் மற்றும் கிறிஷாந்தினி குமாரவேல் ஆகியோரால் இந்த அமர்வுகள் நடத்தப்பட்டன. அவர்கள் இணைய தளங்களில் பெரிதும் தங்கியிருக்கும் இளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் இந்த சவால்களை சமாளிக்க உதவும் தொழில்நுட்பத்தின் நேர்மறையான அம்சங்களில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தினர். அமர்வுகள் மிகவும் இடைத்தொடர்பாடல் கொண்டவையாக அமைந்ததுடன், பங்கேற்பாளர்களின் நேர்மறையான கருத்துகளுடன் நிறைவடைந்தன.

இரத்மலானையைச் சேர்ந்த மாணவியான சந்துலா சுலக்கனா அவர்கள் கூறுகையில், "இந்த அமர்வை நான் மிகவும் பயனுள்ளதாக உணர்கிறேன். ஏனெனில் எனது வாழ்க்கையில் முதன்முறையாக நான் எவ்வாறு என்னைப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் இணைய வெளிகளில் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை கற்றுக்கொண்டேன். இது எனக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. ஏனைய மாணவர்களுக்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஜோன் கீல்ஸ் பவுண்டேஷனை நான் கேட்டுக்கொள்கிறேன்," என்று குறிப்பிட்டார்.

ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழிப் புலமைப்பரிசில் திட்டத்தின் பயனாளிகளுக்காக இந்த அமர்வுகள், பல செயற்திட்டங்களின் கீழ் நன்மைகளை ஒருங்கிணைக்கும் ஒரு நிகழ்வாக நடத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழிப் புலமைப்பரிசில் திட்டம் மற்றும் WAVE ஆகியன கைகோர்த்திருந்தன.

# பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் அரவணைப்பு உள்ளடக்கம்





அரவணைத்து உள்ளடக்கிய, பன்மைத்துவம் கொண்ட மற்றும் சமத்துவமான பணிச்சூழலை உருவாக்குவதில் குழுமத்தின் முக்கியத்துவத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், குழுமம் SanNap செயற்திட்டத்தின் முதல் கட்டத்தை 2022 ஜூன் 13 அன்று முன்னெடுத்துள்ளது. முதல் கட்டத்தின் கீழ், ஜோன் கீல்ஸ் குழுமத்தின் அனைத்து பெண் ஊழியர்களுக்கும் சுகாதார அணையாடைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமானது இன்னும் விரிவடைந்து குடும்பத்தினருக்கும் இந்த முயற்சியை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இதன் மூலமாக குடும்பத்திலுள்ள ஒரு பெண் அங்கத்தினருக்கு தமக்குரிய ஒதுக்கீட்டை வழங்க விரும்பும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த வசதியை வழங்க குழுமம் எண்ணியுள்ளது. இதன் மூலம் ஜோன் கீல்ஸின் நீட்டிக்கப்பட்ட குடும்பத்திற்கு மேலும் விழிப்புணர்வை அதிகரித்து, ஆதரவளிக்கிறது.

SanNap திட்டத்தின் ஒரு பகுதியாக, மாதவிடாயுடன் தொடர்புபட்ட சுகாதார ஆபத்துக்கள் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கும் நோக்குடன் ஹேமாஸ் நிறுவனத்துடன் இணைந்து, குழும ஊழியர்களுக்கு மாதவிடாய் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை குழுமம் ஏற்பாடு செய்யும்.




ஜோன் கீல்ஸ் குழுமம் 2022 ஜூன் 6 அன்று அனைவராலும் அணுகப்படக்கூடிய எங்கள் மின்-கற்றல் தளங்களில் மும்மொழி மின்-அலகினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் LGBTIQ+ சமூகத்தின் பாலின அடையாளம், பாலியல் நோக்குநிலை, அனைவரையும் அரவணைத்து உள்ளடக்கும் விழிப்புணர்வை மேம்படுத்துவதை குழுமம் நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், அனைவரையும் இது தொடர்பான தகவல் விபரங்களை அறியப்பெற்றவர்களாக மாற்றுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. 2022 ஜூன் முதல், இந்தப் பாடநெறி குழுமத்தின் அறிமுக நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மட்டுமல்லாமல், ஜோன் கீல்ஸில் உள்ள அனைவருக்கும் கட்டாய வருடாந்த கற்றல் அறிவாகவும் இருக்கும்.



அணியின் பெண் உறுப்பினர்களை ஊக்குவிக்கவும், அறிவூட்டவும், குழுமத்தின் பெண்களை மையமாகக் கொண்ட அறிவூட்டல் முயற்சியான றுழுஐஊநு இன் 4 ஆவது பாகம், 2022 ஜூன் 30 அன்று நடைபெற்றது. இந்த அமர்வானது "நுஅிழறநசபைெ டீயடயஉெந" (சமநிலையை மேம்படுத்துதல்) என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டது. துணை பிரதம நிறைவேற்று அதிகாரியும், சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகளின் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான ஹிஷான் சிங்கவன்ச, ஜேகே மார்க்கெட்டிங் சேர்விசஸ் இன் சந்தைப்படுத்தல் துறை தலைமை அதிகாரியான நிலுஷா பெர்னாண்டோ, சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் இன் சந்தைப்படுத்தல் முகாமையாளரான சுதீப வீரசேகர, ஜோன் கீல்ஸ் பவுண்டேஷனின் தெவான்ஷி பெர்னாண்டோ ஆகியோரால் நடாத்தப்பட்டதுடன், பெந்தோட்டை சினமன் பே இன் உதவிச் செயற்பாட்டு முகாமையாளரான லஷாந்தன் கோபாலன் இதனை நெறிப்படுத்தினார்.

# குழும செய்திகள்

## சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள்





சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் தன்னை அண்டியுள்ள சமூகங்கள், அன்றாடம் உழைப்பவர்கள் மற்றும் நலிவுற்றவர்களுக்கு வழங்கும் உணவு நன்கொடை முயற்சியான 'Meals that Heal' என்பதை தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வாதாரத்தை ஆதரிக்கும் வழிமுறையாக தொடர்ந்து விரிவுபடுத்துகிறது. முதன்முதலில் 2021 ஜூனில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சி, 2022 ஜூன் 1 அன்று மீண்டும் தொடங்கப்பட்டதுடன் வர்த்தகநாமத்தின் வழங்கல் தளத்தின் ஒரு பகுதியாகும். அதாவது Flavours by Cinnamon என்பது சமூகங்களுக்கு உணவை வழங்க வர்த்தகநாமத்தின் முயற்சியில் அங்கம் வகிப்பதற்கு வாடிக்கையாளர்களுக்கு இடமளிக்கின்றது.

6.10.3 2022 ஜூன் 8 அன்று உலக சமுத்திர தினத்தை நினைவுகூரும் வகையில், சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்தின.



மாலைதீவு சினமன் எலைடூ, மீன் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் செயற்கை பாறை கட்டமைப்புகளை மூலோபாயரீதியாக அமைத்தது. சீமெந்து, மணல், மொத்த மற்றும் நொறுக்கப்பட்ட கண்ணாடி ஆகியவற்றைக் கொண்டு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாறைக் கட்டிகளைப் பயன்படுத்தி, நொறுக்கப்பட்ட கண்ணாடி கடலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டது.



மாலைதீவு சினமன் டொன்வலி 2018 ஆம் ஆண்டில் பவள இனப்பெருக்கத் திட்டத்தில் கால்பதித்திருந்த நிலையில், இன்றுவரை 24 பவளச் சட்டங்களை கடல் நீரேரியைச் சுற்றி அமைத்துள்ளது. அவற்றின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

மாலைதீவு சினமன் ஹஹுரா ஹுரா பவள இனப்பெருக்கத் திட்டத்தை மேற்கொண்டுள்ளதுடன், இங்கு பொறியியல் அணி கிட்டத்தட்ட 10 உருக்குச் சட்டங்களை உருவாக்கும். உயிருள்ள பவளப்பாறைகள் கடலில் இருந்து நுணுக்கமாக எடுக்கப்பட்டு, Marine Biologist and Dive School அணியால் சட்டங்களில் கட்டி, கடல் நீரேரியில் பவளப்பாறைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் கடல் நீரேரியில் வைக்கப்படும்.

இலங்கையில், சினமன் ஹிக்கா டிரான்ஸ் ஆனது ஒரு கடற்கரை மற்றும் கடல்வாழ் உயிரின பாதுகாப்பு திட்டத்தை ஆரம்பித்ததுடன், ஆமைகள் மற்றும் புதிதாக உருவாகும் பவளப்பாறைகளை பாதுகாக்க எச்சரிக்கை அறிவிப்புகள் வைக்கப்பட்டுள்ளன. சினமன் ட்ரிங்கோ புளூ காயம்பட்ட கடல் ஆமைகளைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்து, உல்லாச விடுதிக்கு முன்னால் உள்ள அவற்றின் கூடு கட்டும் இடத்தைப் பாதுகாப்பதிலும் வனவிலங்கு திணைக்களத்திற்கு உதவுகிறது.



## சினமன் லேக்சைட்



கொழும்பின் தனித்துவச் சின்னமும் மற்றும் கவர்ச்சியான சுற்றுலா மது விடுதியான ColomBar, அதன் முன்னைய, புதுப்பிக்கப்பட்ட இடத்திற்கு 2022 மே 4 அன்று மீண்டும் இடம்மாற்றப்பட்டுள்ளது. நகரம் மற்றும் தீவின் துடிப்பான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை ஒரே இடத்தில் வெளிப்படுத்தும் வகையில், ColomBar இப்போது கொழும்பு சினமன் லேக்சைட்டில் உள்ள உணவகங்கள் அமைந்துள்ள அதன் முன்னைய இடத்திற்குத் திரும்பியுள்ளது. ColomBar நகரத்தில் உள்ள மற்ற மது விடுதி அனுபவங்களிலிருந்து தனித்துவமான உண்மையான அனுபவத்தை வழங்குவதன் மூலம் ஏனையவற்றிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்கிறது.

## சினமன் வைல்ட் யால

வெசாக் அலங்கார வெளிச்சக்கூடு போட்டி 2022 மே 15 அன்று சினமன் வைல்ட் யால ஹோட்டல் வளாகத்தில் அனைத்து பணிப் பிரிவுகளின் பங்களிப்புடன் நடைபெற்றது. சமையல் பிரிவு 1 ஆவது இடத்தையும், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே உணவு மற்றும் பான வகைப் பிரிவும், நிதி மற்றும் மனித வளங்கள் பிரிவும் வென்றன. போட்டிக்காக அனைத்து பணிப்பிரிவுகளாலும் படைப்பாக்க நயம் கொண்ட மற்றும் கவர்ச்சிகரமான விளக்குகள் தயாரிக்கப்பட்டன.





## மாலைதீவு சினமன் டொன்வலி







ஜூன் 5, 2022 அன்று உலக பூமி தினத்தை அனுட்டிக்கும் வகையில், தீவின் பசுமையை மேம்படுத்துவதற்காக, உள்ளே தங்கியிருந்த விருந்தினர்கள் மற்றும் எங்கள் சினமன் தூதர்களின் பங்கேற்புடன் மரம் நடும் ஊக்குவிப்புப் பிரச்சார நிகழ்வு காலையில் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து கலந்துகொண்டோரின் சுறுசுறுப்பான பங்கேற்புடன் வினா-விடைப் போட்டியும் நடத்தப்பட்டதுடன், இதில் அனைவரும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.

## பேருவளை சினமன் பே


பேருவளை சினமன் பே, 2022 ஏப்ரல் 21 அன்று தனித்துவமான சுற்றுலா உணவுத் தெரிவுகள் தொடர் நிகழ்வை உருவாக்கி, அறிமுகப்படுத்தியது. "Breakfast on the Reef" உடன் தொடர் உணவு அனுபவங்கள் தொடங்கப்பட்டதுடன், இங்கு தம்பதியருக்கு கடலின் பாறைகளில் காலை உணவை உண்ணும் காதல் அனுபவம் வழங்கப்பட்டது.





## சினமன் பெந்தோட்டை பீச்

சினமன் பெந்தோட்டை பீச் ஆனது 2022 ஏப்ரல் 14 அன்று "Soorya Mangalya" நிகழ்வை மிகவும் அலங்காரமான பாரம்பரிய நிகழ்வுகளில் ஒன்றாகக் கொண்டாடியதுடன், இது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விருந்தினர்களின் கவனத்தையும் அவர்களின் பங்கேற்பையும் பெற்றது.





6.16.2 பொது முகாமையாளருடன் கோப்பி விருந்து - அணி உறுப்பினர்கள் பொது முகாமையாளர் மற்றும் நிர்வாக முகாமைத்துவத்துடன் இணைந்து கோப்பி மற்றும் சிற்றுண்டிகள் அடங்கிய விருந்தின் மூலம் எளிமையான உரையாடலை நடத்துவதற்கான ஒரு தளமாக 2022 மே 3 அன்று நடைபெற்றது. அணி உறுப்பினர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட குவளையில் கோப்பி வழங்கப்பட்டது.




## சினமன் ரெட்

கொழும்பு சினமன் ரெட் ஆனது 2022 மே 27 அன்று ஹோட்டல் வளாகத்தில் ஒரு தற்காலிக விற்பனையை நடத்தியது. இது ஊழியர்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவும் அதே போல் சினமன் ரெட் குடும்பத்திற்குள் நட்புறவை மேம்படுத்தவும் செய்தது. ஊழியர்கள் தங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டமை ஊக்கமளிப்பதாக இருந்தது. தற்காலிக விற்பனையில் உணவுப் பொருட்கள், கையால் செய்யப்பட்ட பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.






கொழும்பு சினமன் ரெட் 2022 மே 31 அன்று அனைத்து பணியாளர்களுக்கும் பகிரங்கமாக தேநீர் தயாரிக்கும் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது. இது அனைத்து பணிப் பிரிவுகளிலும் உள்ள ஊழியர்களுக்கு பணியில் இருக்கும் வழக்கமான சவால்களில் இருந்து விடுபட்டு, போட்டி மனப்பான்மையுடன் வீட்டில் தயாரிக்கப்படும் வகையில் சிறந்த தேநீர் கோப்பையை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்கியது. போட்டியானது "பாரம்பரியமானது" மற்றும் "புதுமையானது" என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.





# குழும செய்திகள்

## சினமன் கிராண்ட்

சினமன் கிராண்ட் தனது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நீண்ட கால சேவை விருதுகளை 2022 மார்ச் 31 அன்று நடத்தியது. 2020 ஆம் ஆண்டிற்காக 126 பணியாளர்களுக்கும், 2021 ஆம் ஆண்டிற்காக 65 பணியாளர்களுக்கும் நீண்ட கால சேவை விருதுகள் ஓக் றூமில் இடம்பெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது.

ஹோட்டலில் அவர்கள் பணியாற்றிய காலம் முழுவதும் பணியாளர்கள், அவர்களின் சாதனைகள், அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் அடையாளமாக வருடாந்த நிகழ்வு அமைந்துள்ளது. தொழில் வாழ்வில் சாதனை இலக்குகளைக் கொண்டாடி விருது பெற்றவர்கள், தங்கள் சேவையின் ஆண்டுகளின் அடிப்படையில் தங்க நாணயங்களைப் பெற்றனர். இரண்டு வருடங்களையும் இணைத்து, 37 பணியாளர்கள் ஐந்தாண்டு கால சேவைக்கும், 68 பேர் பத்து ஆண்டுகளுக்கும், 45 பேர் பதினைந்து ஆண்டுகளுக்கும், 21 பேர் இருபது ஆண்டுகளுக்கும், 11 பேர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும், 9 பேர் முப்பது ஆண்டு சேவைக்கும் அங்கீகரிக்கப்பட்டனர்.








2021.'.22 நிதியாண்டின் நான்காவது காலாண்டிற்கான சினமன் கிராண்டின் பணியாளர்களுக்கான காலாண்டு கூட்டம் 2022 ஏப்ரல் 7 அன்று ஓக் றூமில் இடம்பெற்றது.

பொது முகாமையாளர் கமல் முனசிங்க பணியாளர்களை வரவேற்று உரையாற்றியதுடன், கடந்த நிதியாண்டில் ஹோட்டலின் செயல்பாடுகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார். அவர் ஹோட்டலின் எதிர்காலத் திட்டங்களை விளக்கியதுடன், இந்த சவாலான காலங்களில் ஹோட்டலுக்கான கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக அனைத்து பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இத்தகைய நிலைமை இருந்தபோதிலும், கடினமாக உழைத்த அனைவருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.


## வோக்கர்ஸ் டுவர்ஸ்



வோக்கர்ஸ் டுவர்ஸ், எமிரேட்ஸ் மற்றும் சினமன் ரிசோர்ட்ஸ் இணைந்து 2022 ஏப்ரல் 27 முதல் மே 1 வரை ஹங்கேரியில் இருந்து 8 பிரயாண முகவர்களை வரவழைத்திருந்தன.

அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த போது, சிகிரியா குன்று கோட்டை, கண்டி கோவில் மற்றும் காலி கோட்டை போன்ற சில முக்கிய இடங்களையும் உள்ளடக்கிய இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட சிறப்பம்சங்களை அவர்கள் ஆராய்ந்து, அனுபவித்தனர்.







வோக்கர்ஸ் டுவர்ஸ் Flockeo வலையமைப்பின் பங்காளராக மாறியுள்ளதுடன், இது வணிக-நுகர்வோர மற்றும் வணிக-வணிக சுற்றுலா சேவை வழங்குநர்களுக்கான உலகளாவிய சந்தையாகும். இது நிலைபேண்தகு மற்றும் சுற்றுச்சூழல்-பொறுப்புணர்வுடனான வணிக அணுகுமுறையில் கவனம் செலுத்துகிறது. வோக்கர்ஸ் டுவர்ஸ், 3 ஏனைய உள்நாட்டு சுற்றுலாப் பிரயாண முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஆகியவற்றுடன் இணைந்து, இலங்கையை ஒரு நிலைபேண்தகு சுற்றுலாப் பிரயாண இடமாக மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சியாக 2022 மே 2 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை Flockeo உறுப்பினர்களுக்கான (நிலைபேண்தகு சுற்றுலாவில் கவனம் செலுத்தும் Francophone முகவர்கள்) ஒரு அறிமுகப் பிரயாணத்தை ஏற்பாடு செய்திருந்தன.

## ஜோன் கீல்ஸ் புரொப்பட்டீஸ்

TRI-ZEN இல் உள்ள மூன்று கட்டுமானக் கோபுரங்களுக்கான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற மேல்தள கொங்கிரீட் இடும் வைபவத்தைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் சீராக வளர்ச்சி கண்டு வருகின்றன. எந்திரவியல், மின்னியல் மற்றும் குழாய் பொருத்தல் பணிகள் 40 ஆவது தளம் வரை முன்னேற்றமடைந்துள்ள அதே நேரத்தில் 2022 ஜூன் 6 நிலவரப்படி மூன்று கட்டுமானக் கோபுரங்களின் 20 ஆவது தளம் வரை இறுதிப் பணிகள் நிறைவடைந்துள்ளன. TRI-ZEN கட்டுமானப் பணியின் இறுதிக் கட்டத்தை நோக்கி நகர்வதால், 2023 ஆம் ஆண்டில் அடுக்குமாடி குடியிருப்புகளை வாடிக்கையாளர்களிடம் ஒப்படைக்க முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.





## சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் எதிர்பார்க்கப்படும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வலுவூட்டும் வகையில் தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை 2022 மே 12 அன்று ஆரம்பித்து வைத்துள்ளது. வீட்டுத்தோட்டம் தொடர்பான அடிப்படை திறன்களை அனைத்து ஊழியர்கள் மத்தியிலும் வளர்ப்பதற்காக "வீட்டுக்காக வீட்டுத் தோட்டம்" என்ற முன்னெடுப்பானது பாரிய முயற்சிகளில் ஒன்றாக அமைந்துள்ளதுடன், களுத்துறை மாவட்ட விவசாய பயிற்றுவிப்பாளர் சுபாஷ் ஜயநெத்தி அவர்களால் இந்நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.



## ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ்



அனைத்து விநியோக மையங்களிலும் மற்றும் தலைமை அலுவலகத்திலும், JKLL அணி 2022 ஏப்ரல் 18 முதல் 20 வரை புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்தியது. பண்டிகை காலத்தின் பாரம்பரியங்களுடன், கண்ணைக்கவரும் ஆடை அலங்காரங்கள் மற்றும் விநோதமான நடவடிக்கைகள் அடங்கியிருந்தன.





JKLL அணியினர் 2022 மே 16 அன்று நாடு முழுவதும் உள்ள விநியோக மையங்களில் வண்ணமயமான அலங்காரங்களுடன் வெசாக் பண்டிகையைக் கொண்டாடியுள்ளதுடன், பண்டிகையின் அமைதியைப் பிரதிபலிக்கும் வகையில் அமையப்பெற்றது.

## தெற்காசியா கேட்வே முனையங்கள்



SAGT 2 Ship-to-Shore (STS) இறங்கு துறை பாரம் தூக்கிகளை அதன் செயல்பாட்டுத் திறனை இறங்குதுறையில் மேம்படுத்துவதற்காக ஆரம்பித்து வைத்துள்ளது. ZPMC ஆல் தயாரிக்கப்பட்ட, பாரம் தூக்கிகள் 2022 ஏப்ரல் 17 அன்று SAGT ஐ வந்தடைந்தன. பாரம் தூக்கி ஒன்றுக்கு 65 தொன்கள் வரை இரட்டை பாரம் தூக்கி திறன்கள், அதன் இயக்க செயல்பாடு முழுவதும் மேம்பட்ட தொழில்நுட்பம், குறிப்பாக பிரேக்குகள், உயர் தொழில்நுட்ப siemens இயக்கங்கள் மற்றும் கட்டுப்பாடுகள், சமநிலையற்ற சுமையை கையாளுதல், பாரம் தூக்கிக்கும் கப்பலுக்கும் இடையிலான மோதல் எதிர்ப்பு கட்டமைப்பு, பாரம் தூக்கிகளுக்கு இடையிலான மோதல் எதிர்ப்பு கட்டமைப்பு, பாரம் தூக்கியில் அளவுக்கதிகமான சுமை, அதிக வேகம், சுமை பிடிப்பு பாதுகாப்பு கட்டமைப்புகள், முழுமையான செயல்பாடு கொண்ட கண்காணிப்பு கமெரா மற்றும் இயக்குனர் வசதிகள் ஒட்டுமொத்தத்தில் பாதுகாப்பான செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துகின்றன.



வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை மேலும் மேம்படுத்தும் அர்ப்பணிப்புடன், 2022 ஜூன் 1 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கான முதல் சுய-சேவை ஒன்லைன் e-DA வசதியை SAGT அறிமுகப்படுத்தியது. இந்த வசதி வாடிக்கையாளர்களுக்கு இறக்குமதி கொள்கலனைப் பெறுவதற்கு இலகுவான பயனர் செயல்முறைக்கு வலுவூட்டுவதுடன், மின்-வழங்கல் குறிப்பு (e-Delivery Advice - e-DA) 24 மணி நேர வசதியை வழங்குகின்றது. ஒரு விமானப் பயணி விமானத்தில் ஏறுவதற்கான தனது அனுமதி அட்டையை தானாகவே செயல்படுத்திப் பெற்றுக்கொள்வதை ஒப்பான செயல்பாடாக இது அமைந்துள்ளது.

## கீல்ஸ்







நமது தேசம் எதிர்கொள்ளும் சவாலான சூழ்நிலைகள் மற்றும் நமது சமூகங்கள் மீதான அவை ஏற்படுத்தியுள்ள நேரடியான தாக்கத்தின் பின்னணியில், அத்தியாவசிய உணவுத் தேவை கொண்ட தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு உதவும் ஒரே நோக்கத்துடன், "சிறந்த எதிர்காலத்திற்காக, ஒன்றாக" (Together for a Better Tomorrow) என்ற தொண்டுப்பணிப் பிரச்சாரத்திற்கு உதவ 2022 மே 6 அன்று கீல்ஸ் தீர்மானித்தது. பதிவுசெய்யப்பட்ட தொண்டு நிறுவனமாக இல்லாவிட்டாலும், இலங்கையில் உள்ள தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு உதவவும் ஆதரவளிக்கவும் கீல்ஸ் அவர்களின் தொண்டுப்பணிக் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றும்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் கீல்ஸ் ஆகியன இணைந்து இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதால், வாழ்வாதார அபிவிருத்தியினூடாக எமது முயற்சிகளை நீட்டித்து, சமூகங்களுக்கு வலுவூட்டுவதற்காக 2022 மே 4 அன்று USAID உடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. 128 க்கும் மேற்பட்ட கீல்ஸ் விற்பனை நிலையங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற கிட்டத்தட்ட 120 பெரிய மற்றும் சிறிய அளவிலான வழங்குனர்களுடன் தேசத்திலுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு இத்திட்டம் பலனளிக்கும்.





2022 ஏப்ரல் 27 மற்றும் மே 4 ஆம் திகதிகளில் கீல்ஸ் விற்பனை மைய அணி உறுப்பினர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொள்ள வாடிக்கையாளர் சேவை உதவி மற்றும் காசாளர் அமர்வுகள் நடத்தப்பட்டன. இந்த அமர்வு JMSL மனித வள அணிக்கு உள்ளக அணி உறுப்பினர்களுக்கு சிறப்பாகச் சேவை செய்ய உதவும் சிறந்த நுண்ணறிவை வழங்கியது. மனித வள அணி மற்றும் விற்பனை மைய அணி உறுப்பினர்கள் என இரு தரப்பினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

## ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன்


ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் அணியானது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஐ அலைவரிசை உடன் கைகோர்க்கும் வாய்ப்பினைப் பெற்றது. 2022 ஜூன் 6 அன்று அவர்களின் இலங்கைக்கான அவுஸ்திரேலியா சுற்றுப்பயணத்திற்காக போட்டிக்கு முந்தைய பகுப்பாய்வு நிகழ்ச்சிக்காக இலங்கையில் உத்தியோகபூர்வ ஒளிபரப்பு பங்காளராக செயற்பட்டது. JKOA ஆனது தொடர்புடைய தரவு மற்றும் புள்ளிவிபரங்களைக் காண்பிக்க, நிகழ்வின் போது பயன்படுத்தப்படுவதற்கு LED பலகையை பங்களித்தது.






# குழும செய்திகள்

## யூனியன் அசூரன்ஸ்




வாடிக்கையாளர்கள் தங்கள் காப்புறுதித் திட்டங்களை நிர்வகிக்க அவர்களுக்கு வலுவூட்டும் யூனியன் அசூரன்ஸின் தொழில்துறையிலேயே முதன்முதல் விரிவான டிஜிட்டல் தீர்வான Click Life App, வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ வழிவகுப்பதன் மூலம் ஒரு படி மேலே சென்றுள்ளது. 2022 மே 24 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட இந்த புத்தாக்கமான App, அற்புதமான உடற்பயிற்சி அம்சங்களைக் கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் நம்பிக்கைப் புள்ளிகளின் அடிப்படையில் பெறுமதிமிக்க வாழ்க்கை முறை வெகுமதிகளை வழங்குகிறது.






யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான முகவர் வருடாந்த விருதுகள் நிகழ்வை நடத்தியதுடன், அவர்களின் முன்மாதிரியான செயல்திறனுக்காக அதன் உச்ச சாதனையாளர்களை கௌரவித்தது. 2022 மே 8 அன்று மொனார்க் இம்பீரியலில், 'மேன்மைக்கு முடிசூடுதல்' என்ற கருப்பொருளின் கீழ் இந்நிகழ்வு உயர் அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது.

## ஜோன் கீல்ஸ் பிஎல்சி




டீ ஸ்மோல்ஹோல்டர் ஃபெக்டரீஸ் பிஎல்சி ஆல் நிர்வகிக்கப்படும் ஹிங்கல்கொட தேயிலை தொழிற்சாலை, தொடர்ந்து உயர்தர தேயிலை வகைகளை உற்பத்தி செய்வதில் புகழ்பெற்றதுடன், 2022 ஏப்ரல் 20 முதல் மே 31 வரை முடிவடைந்த ஏலத்தின் போது இது வரையான சாதனை விலைகளை நிலைநாட்டியுள்ளது. ஆண்டின் 1 ஆவது காலாண்டில் PF தரத்திற்கான இது வரையான சாதனை விலையை ஹிங்கல்கொட தேயிலை தொழிற்சாலை நிலைநாட்டியுள்ளமை இது ஆறாவது தடைவ என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உயர் விலை தேயிலை வகைகள் ஜோன் கீல்ஸ் பிஎல்சியால் சந்தைப்படுத்தப்பட்டு விற்கப்பட்டன.




ஜோன் கீல்ஸ் பிஎல்சி 2022 ஏப்ரல் 22 அன்று சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடியது. இந்த நிகழ்வில் பல பாரம்பரிய விளையாட்டுகளும், அதைத் தொடர்ந்து கொத்து விருந்து இரவு நிகழ்வும் இடம்பெற்றன.

## மத்திய தொழிற்பாடுகள்

ஜோன் கீல்ஸ் முகாமைத்துவப் பயிலுனர் நிகழ்ச்சித்திட்டம் 2022 க்கான விண்ணப்பங்கள் 2022 ஜூன் 1 முதல் 15 ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், மொத்தமாக 130 விண்ணப்பதாரிகள் இதற்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, வீடியோ சமர்ப்பிப்பை பதிவேற்றம் செய்யுமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.




ஜோன் கீல்ஸ் முகாமைத்துவப் பயிலுனர் நிகழ்ச்சித்திட்டம் 2022 க்கான விண்ணப்பங்கள் 2022 ஜூன் 1 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 'To the Top' என்ற கருப்பொருளுடன் ஆரம்பிக்கப்பட்டு மொத்தம் 652 விண்ணப்பதாரர்கள் இதற்கு விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்ப செயல்முறையின் ஒரு பகுதியாக, விண்ணப்பதாரர்கள் வீடியோ சமர்ப்பிப்பை பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



## ஜோன் கீல்ஸ் ரிசேர்ஜ்





ஜோன் கீல்ஸ் ரிசேர்ஜ் இன் இணையத்தளம் இப்போது நேரலையில் உள்ளது! இது JKR இன் ஆராய்ச்சி அம்சங்கள், கிடைக்கப்பெறும் தொழில்நுட்பங்கள் மற்றும் JKR உடனான ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கான ஈடுபாட்டின் முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு தகவல் இணையத்தளமாகும். புதுமையான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் JKR அணியின் வாழ்க்கை பற்றிய இடுகைகளை பிரசுரிக்கும் வலைப்பதிவையும் இந்த தளம் கொண்டுள்ளது. தளத்திற்குச் செல்வதற்கு - https://www.johnkeellsresearch.com




4Ever Skin Naturals (PVT) Ltd இன் தொழிற்சாலையை JKR 2022 ஏப்ரல் 19 அன்று நேரில் சென்று பார்வையிட்டதுடன், JKR இன் தனியுரிமமான Silmetic™ தொழில்நுட்பத்தை மாற்றுவதன் மூலம் அதன் தொழில்நுட்ப பரிமாற்ற செயல்முறையை நிறைவு செய்தது. 4Ever தனது துணை வர்த்தகநாமமான Derma PRO இன் கீழ் JKR இன் Silmetic™ தொழில்நுட்பத்தை இணைத்து, தலைசிறந்த சருமப் பராமரிப்பு தயாரிப்புகளை உற்பத்தி செய்யும்.


## ஒக்டேவ்




Data Storm 3.0 - மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் றோட்டரிக் கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் றோட்டரிக் கழகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இலங்கை இளைஞர்,யுவதிகளுக்கான மேம்பட்ட பகுப்பாய்வு போட்டியானது, 'Introductory Webinar series of Data Storm 3.0' என்ற தொடரின் கீழ் 'தரவு அறிவியல் மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளில் தொழில் வாய்ப்புகள்', 'தரவு சுத்தப்படுத்தல், முன் செயலாக்கம் மற்றும் இயந்திர கற்றல் நடைமுறைகள்' மற்றும் 'வழிமுறை தெரிவு மற்றும் இயந்திர கற்றல் நடைமுறைகள்' ஆகிய மூன்று பாகங்களாக இடம்பெற்றது. இப்போட்டிக்கு 182 அணிகள் பதிவு செய்திருந்த நிலையில், 5 அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. Data Storm 3.0 இன் இறுதிப் போட்டி 2022 ஏப்ரல் 9 அன்று DHPL கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வு முழுவதும், போட்டியாளர்கள் OCTAVE இடமிருந்து தரவு அறிவியல் நிபுணர்களால் தலைமை வகுப்புகள் மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றனர்.







Microsoft Teams மூலம் 2022 ஏப்ரல் 1 அன்று பி.ப 6.00 மணி முதல் பி.ப 7.00 மணி வரை பட்டதாரி மாணவர்களுக்காக 'Let's Talk Data!' என்ற தொனிப்பொருளில் 'OCTAVE Quiz Night' நிகழ்வு இடம்பெற்றது. தரவு விஞ்ஞானி லேஷக கருணாரத்ன, தரவு விஞ்ஞானி தீரஜ் சில்வா மற்றும் தரவு விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பணியாளரான சாரக அபேவிக்ரம ஆகியோரால் இது நடத்தப்பட்டது. எமது தரவு விஞ்ஞான அணியின் வழிகாட்டுதலின் கீழ் யதார்த்த வாழ்க்கை தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு பயன்பாட்டு வழக்கத்தை எவ்வாறு தீர்ப்பது என்பதை கற்பிப்பதே இந்த விநோதமான மற்றும் தகவலறிவு சார்ந்த அமர்வின் நோக்கம்.




OCTAVE Advanced Analytics Symposium 2022 நிகழ்வானது 2022 மே 20 அன்று மெய்நிகர் நிகழ்வாக நடத்தப்பட்டது. இறுதியாண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு தொடர்பான ஆய்வறிக்கை/ஆராய்ச்சித் திட்டத்தின் கண்டுபிடிப்புகளை முன்வைக்க இது ஒரு சிறந்த தளமாகும். பத்து இறுதிப் போட்டியாளர்கள் தங்கள் ஆய்வறிக்கையை தரவு ஆர்வலர்கள் மற்றும் தொழில் துறை வல்லுநர்களின் பரந்த அரங்கத்தினர் மத்தியில் முன்வைத்தனர். நடுவர்களாக கலாநிதி ராஜித நவரத்ன - முதன்மை தரவு விஞ்ஞானி, அசங்க குணவர்தன - சிரேஷ்ட தரவு விஞ்ஞானி, சர்மிலன் சிவநேசசுந்தரம் - சிரேஷ்ட தரவு விஞ்ஞானி, தினுஷ திஸாநாயக்க - தரவு விஞ்ஞானி, தீரஜ் சில்வா - தரவு விஞ்ஞானி, பிரவீன் ஏகநாயக்க - தரவு விஞ்ஞானி, விதுஷன் விஜயநாதன் - தரவு விஞ்ஞான மற்றும் பொறியியல் பணியாளர் ஆகியோர் இடம்பெற்றதுடன், லக்சிறினி அக்ஷிலா அனுராங்கி - தரவு விஞ்ஞான மற்றும் பொறியியல் பணியாளர் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

## பிளாஸ்திசைக்கிள்




2017 ஜூலையில் பிளாஸ்திசைக்கிள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, இலங்கை முழுவதும் அதன் கழிவுத்தொட்டி வலையமைப்பின் வளர்ச்சியுடன் 2022 ஏப்ரல் 30 இல் 100,000 கிலோ அளவான பிளாஸ்திக் கழிவுகளை சேகரித்து குறிப்பிடத்தக்க சாதனை இலக்கொன்றினை நிலையாட்டியுள்ளது.



பிளாஸ்திசைக்கிள் உலக சுற்றுச்சூழல் தினத்தை நினைவுகூரும் வகையில் 2022 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு Microsoft Teams மற்றும் முகநூல் நேரலையில் "நமது சுற்றுச்சூழலில் பிளாஸ்திக் மாசுபாட்டின் தாக்கம் மற்றும் அதற்கான தீர்வுகள்" என்ற தலைப்பில் உரையாடலுக்கான ஒரு நிகழ்நிலைக் கருத்தரங்கினை நடத்தியது. நிலைபேண்தகைமை தொடர்பில் மூன்று பேச்சாளர்கள் இதில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்தனர்.

## ஜோன் கீல்ஸ் எக்ஸ்



டிசம்பர் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பயன்பாடுகளைத் தொடர்ந்து, John Keells X ஆனது JKX Accelerate - வணிகத் தொடக்க முயற்சிகளை விரைவுபடுத்தல், JKX Innovate - பகிரங்க புத்தாக்க களம் மற்றும் JKX Elevate - விரிவுபடுத்தலுக்கான முதலீடுகள் ஆகிய தனது 3 தடங்களுக்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

# விளையாட்டுக்கள், கழகங்கள் மற்றும் சங்கங்கள்

## ஹொக்கி



2022 மே 28, ஜூன் 04, ஜூன் 11 மற்றும் ஜூன் 15 ஆகிய திகதிகளில் கொழும்பு ஆஸ்ட்ரோ ஹொக்கி மைதானத்தில் நடைபெற்ற மேர்கன்டைல் ஹொக்கி லீக் 2022 போட்டியில், ஜோன் கீல்ஸ் குழுமம் 16 ஆண்டுகள் என்ற நீண்ட காலத்திற்குப் பிறகு போட்டியின் C பிரிவில் இரண்டாம் இடத்தின் வெற்றியாளர்களாக வலம் வந்தது.

1 வது வரிசை (இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்) - கிளைவ் பெர்னாண்டோ, தேனுக வீரசிங்க, உதேஷ் பிரியங்க, கணேசன் ஜெயப்பிரகாசம், இசுரு கருணாரத்ன

2 வது வரிசை (இடமிருந்து வலமாக அமர்ந்திருப்பவர்கள்) - சஜீவ ஹசந்த, சசங்க மஹாராச்சி, ஹரிசன்டைன் பிரான்சிஸ், திலான் நிரோஷன, கொட்வின் சொலமன்ஸ், ஷெரோன் ஃபேபியன் (அணித் தலைவர்), பெவன் குணவர்தன, பேஷல அரவிந்த, லகிந்து விஜேசிங்க

படத்திற்கு சமூகமளிக்காதவர் - கயான் ஜயசேன, கிஹான் அசங்க

போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு,
2022 மே 28 - JKH எதிர் HNB (1-1 டிரா) - கொட்வின் சொலமன்ஸ் JKH க்காக கோல் அடித்தார்

2022 ஜூன் 04 - JKH எதிர் செலான் (2-2 டிரா) - கொட்வின் சொலமன்ஸ் மற்றும் ஹரிசன்டைன் பிரான்சிஸ் ஆகியோர் JKH சார்பாக கோல் அடித்தனர்.

2022 ஜூன் 11 - JKH எதிர் சிங்கர் (1-3 தோல்வி) - துமுர் க்காக திலான் நிரோஷன கோல் அடித்தார்

2022 ஜூன் 15 - JKH எதிர் பிரவுன்ஸ் (2-1 வெற்றி) - பெவன் குணவர்தன மற்றும் கிளைவ் பெர்னாண்டோ JKH க்காக கோல் அடித்தனர்

## கிரிக்கெட்

2022 ஜூன் 25 அன்று ஆஊயு மைதானத்தில் நடைபெற்ற MC சூப்பர் பிரீமியர் T20 போட்டியின் இறுதிப் போட்டியில் MODE Engineering அணியை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து ஜோன் கீல்ஸ் குழுமம் வெற்றியாளராக வலம்வந்தது. ஜோன் கீல்ஸ் குழும அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பைப் பெற்ற பின்னர், பவர்பிளேயின் போது வெறும் 22 ஓட்டங்களுக்கு 4 முன்னிலை துடுப்பாட்ட வீரர்களை இழந்து தவித்தது. எவ்வாறாயினும், ஐந்தாவது விக்கெட்டுக்கான 94 ஓட்டங்களை உள்ளடக்கிய போட்டியின் வெற்றிகரமான இணைப்பாட்டமானது மூன்றாம் இலக்க துடுப்பாட்ட வீரர் கவின் பண்டார மற்றும் ஆறாவது இலக்க துடுப்பாட்ட வீரர் சச்சித ஜயதிலக்க ஆகியோரால் உருவாக்கப்பட்டது. பண்டார 33 பந்துகளில் 2 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 42 ஓட்டங்களையும், ஜெயதிலக 39 பந்துகளில் 7 சிக்ஸர்களுடன் 62 ஓட்டங்களையும் பெற்றனர். 157 என்ற வெற்றி இலக்கை எதிரணி துரத்திய நிலையில், பரபரப்பான இறுதி ஓவரில் JKH வெற்றியைப் பெற்றது, இறுதி ஆட்டத்தின் நாயகன் சச்சித்த ஜயதிலக 12 ஓட்டங்களை மாத்திரம் இறுதி ஓவரில் விட்டுக்கொடுத்திருந்தார். அணித்தலைவர் இஷான் ஜயரத்னவும் தனது நான்கு ஓவர்களில் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றி பிரகாசித்தார்.




ஜோன் கீல்ஸ் போக்குவரத்துத் துறை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது 2022 மே 28 அன்று கொழும்பு 02 இலுள்ள மலே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் உற்சாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் அணியினரிடையே உத்வேகத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

Mack International Freight ஐப் பிரதிநிதித்துவப்படுத்திய MIF Rocks சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்றதுடன், Cinnamon Air ஐப் பிரதிநிதித்துவப்படுத்திய SAF Hawks இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

ஒரு அணிக்கு பெண் வீராங்கனையொருவரின் பிரதிநிதித்துவம் இருப்பது கட்டாயமாக்கப்பட்டது மற்றும் சுற்றுப்போட்டியின் மிகச் சிறந்த வீராங்கனையும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



# வினாவிடைப் புதிர் மற்றும் போட்டிகள்




அனைத்து 5 கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்து அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்!

ஜேகே டைம்ஸின் சமீபத்திய இதழ் வெளியீட்டின் அடிப்படையில் 5 இலகுவான கேள்விகளுக்கு பதிலளிப்பது மட்டுமே நீங்கள் செய்ய வேண்டும்! உங்கள் பெயர், வணிகப் பிரிவு மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் உங்களது பதில்களை 19 ஆகஸ்ட் 2022 அன்று அல்லது அதற்கு முன்பதாக எமக்கு கிடைக்கும் வகையில் isuri.jkh@keells.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை சதுவெலிபொத்தவில் உள்ள ‘சினமன் மழைக்காடு மறுசீரமைப்புத் திட்டம்’ தளத்தில் கட்டம் கட்டமாக மரம் நடும் முயற்சிக்கு எத்தனை தன்னார்வத் தொண்டர்களை அணி திரட்டியது?
2. குழுமத்தின் SanNap திட்டத்தின் முதல் கட்டம் எதை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?
3. சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முயற்சியின் பெயர் என்ன?
4. ‘OCTAVE Quiz Night’ இன் கருப்பொருள் என்ன?
5. ஜோன் கீல்ஸ் குழுமம் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மேர்கன்டைல் ஹொக்கி லீக்கின் C பிரிவில் இரண்டாம் இடத்திற்கான வெற்றியாளராக வலம் வந்தது?



**ஜேகே டைம்ஸ் 1 ஆவது காலாண்டு வினாவிடைப் போட்டியின் வெற்றியாளர்**

**நிருஷி நாணயக்கார**
வாடிக்கையாளர் உறவுமுறை அதிகாரி
யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி

**இந்த செய்திமடல் ஜோன் கீல்ஸ் குழும நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் விபர பகிர்வு நோக்கங்களுக்காக செய்யப்படுகின்றது.**

**இசுரி அபேவிக்ரம**
**நிர்வாகி - நிறுவன தொடர்பாடல்கள் பிரிவு**

**117 சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 தொ.பே: +94 (0) 11 230 6191,**
**மின்னஞ்சல்:** jkh@keells.com **இணையத்தளம்:** www.keells.com